# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

27.07.2026 | துளிகள் – 30

## 'ஜெபிக்காத கிறிஸ்தவரா' நீங்கள்!

**ஜெ**பிக்காத நண்பனே, நான் உன்னை மிகவும் கருத்துடன் அதே சமயம் மிகக் கடுமையாக எச்சரிக்கின்றேன். நீ ஒரு ஆபத்தான நிலையில் இருக்கிறாய் என்று நான் உன்னை எச்சரிக்கின்றேன். நீ இந்த ஜெபியாத நிலையிலே மரிப்பாயானால், நீ ஒரு நஷ்டப்பட்ட ஆத்துமாதான்.... கர்த்தரைத் தேட மனமில்லாத உனக்கு மன்னிப்பு கிடையாது என்பதை மறந்து விடாதே!

கர்த்தரிடம் ஜெபிக்கவும், அவரிடம் எதையாவது கேட்பதற்கும், எனக்கு எவ்வித அவசியமுமில்லை என்று சொல்லுவதற்கு நீ யார்? மரணத்தோடும், நரகத்தோடும் நீ சமாதான உடன்படிக்கை பண்ணிக் கொண்டாயோ? நரகத்தின் அவியாத அக்கினியோடும் அங்குள்ள புழுக்களோடும் நீ ஒப்புரவாகி விட்டாயோ? உன் வாழ்க்கையில் கர்த்தர் உனக்கு 'மன்னிக்க வேண்டிய பாவங்கள்' ஒன்றும் உன்னிடமில்லையோ? நரகத்தின் நித்திய அழுந்துதலைக் குறித்து உனக்கு பயம் இல்லையோ? மோட்ச மகிமைகளை அனுபவிக்க வேண்டுமென்ற தாகம் உனக்கில்லையோ? இனியாவது நீ விழித்தெழும்பக் கர்த்தர் உனக்கு உதவி செய்வாராக!

**– ரத்னம்**